Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 9522

Date of Permit 13/04/2016

B/SPL BLDG/84/1 TO 43/2016 M/S. Urban Tree Infrastructure (P) Ltd 86, Goodshepherds Tower V, Kodambakkam High Road, Nungambakkam, Ch-34

File No. B1/240/15

Name of Applicant with Address

Date of Application 23-12-14

Nature of Development : ~~Layout/Sub-division of Land/~~Building construction/~~Charge in use of Land/~~Building

Proposed construction on 3 additional blocks (NPR) Stilt + 4 floors and remaining earlier approved BKA comprising Stilt + 4 FL due to OSR – The proposed Stilt + 4 floors comprising block A TO H, J, K, N, P, R LIG block Stilt + 4 floors and incidental commercial blocks – 1 Stilt + 4 FL & commercial block 2 GF + FF total 636 D.U. (1124 plots) at

Site Address

Division No

S.No. 260/4A, 4B1, 4B2, 262/1, 2, 263/2A, 2B, 264, 265/1B, 296/1, 3, 4, 6, 7, 8A, 8B, 297, 298, 299/1, 3, 301/5, 360/2 Perumbakkam village.

Development Charge paid Rs 2,85,000/- Challan No 02955 Date 23-10-15

PERMISSION is granted to the ~~layout/sub-division of land/~~ building construction/~~change in use of land/~~building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 12/04/2019 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

[signature] 13/4/16

For MEMBER SECRETARY

Earlier PPA B/SPL BLDG/232-1 TO 7/14 B1/18484/12 DT 21-10-14 was cancelled.

[initials] 12/4/16

அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
ஆணையாளர்
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்
சிட்லப்பாக்கம் (இ)
சென்னை 600 064

கடித எண் பி1/240/2015 **தேதி 13.4.2016**

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண் 260/4A, 4B1, 4B2, 262/1, 2, 263/2A, 2B, 264, 265/1B. 296/1, 3, 4, 6, 7, 8A, 8B, 297, 298, 299/1, 3, 301/5 மற்றும் 360/2 , பெரும்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம்,, சென்னை –இல் வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் கொண்ட 3 கூடுதல் தொகுப்பு கட்டிடங்கள் (N,P,R) மற்றும் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் கொண்ட தொகுப்பு கட்டிடம் A (திருத்தம் செய்து திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான) மொத்தம் 16 தொகுப்பு கட்டிடங்கள் (A,B,C,D,E,F,G,H,J,K, LIG, N,P,R இன்சிடெண்டல் வணிக வளாகம் 1&2) குறைந்த வருவாய் பிரிவினைற்கான 112 குடியிருப்புகளும் மற்றும் இன்சிடெண்டல் வணிக வளாகம் 1: வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் மற்றும் இன்சிடெண்டல் வணிக வளாகம் 2: தரைத் தளம் + முதல் தளம் கொண்ட குடியிருப்புக்கான கட்டிடம் மொத்தம் 636 குடியிருப்புகள் (குறைந்த வருவாய் பிரிவினற்காக 112 குடியிருப்புகள் உட்பட) – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப் பிரிவு எண் 1046/2014 இல் 23.12.2014 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.3.2012
3. அரசாணை (பல்வகை) எண்.303 வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 30.12.2013.
4. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 26.10.2015.
5. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 3.11.2015.
6. இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 1.2.2016.
7. விண்ணப்பதாரரின் கடித நாள் 4.2.2016.
8. ஏற்கனவே உத்தேச கட்டுமானம் ஒப்பளித்த கடித எண் பி1/18484/2014 நாள் 21.10.2014 மற்றும் செ.பெ.வ. குழுமத்திற்கான இந்த ஒப்புதலில் திறந்தவெளி ஒதுக்கீடு எண் 1. தானப்பத்திர எண் 5352/14 நாள் 16.5.2014 மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு எண் 2. தானப்பத்திர எண் 5352/14 நாள் 16.5.2014 மற்றும் சாலை விரிவு படுத்துவதற்கான நிலம் செ.வெ.வ. குழுமத்திற்கு தானமாக கொடுத்த தானப்பத்திர எண் 5351/14 நாள் 16.5.2014.
9. உத்தேச மனையில் காண்பிக்கப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடு இடத்தினை 3 செ.பெ.வ.குழுமத்திற்கு தானமாக கொடுத்த தானப்பத்திர எண் 1297/2016 நாள் 14.3.2016.
10. சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திடமிருந்து நீச்சல் குளம் அமைப்பதற்கான தடையின்மை சான்றிதழ் அளிக்கப்பட்ட கடித எண்

CMWSSB/P&D/EEI/SP/80(2013-14)/CMDA/14 நாள் 30.6.2014 மற்றும் CMWSSB/P&D/EEI/SP/60(2014-15)/CMDA/15 நாள் 17.4.2015.

11. சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திடமிருந்து நீச்சல் குளம் அமைப்பதற்கான தடையில்லா சான்றிதழ் எண் CMWSSB/P&D/EEIII/SP/45(2013-14)/CMDA/13 நாள் 26.12.2013.

12, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையிடமிருந்து இசைவு பெற்ற கடித எண் SEIAA/TN/F.2376/EC/8(a)/306/2013 நாள் 15.5.2014,

13.விண்ணப்பதாரர் பொதுப் பணித்துறை மற்றும் நீர்வள ஆதார துறையிடருந்து (WRD) தடையின்மைச் சான்றிதழ் பெற்ற கடித எண் T5(7)/ 5172/2013 நாள் 24.5.2013 மற்றும் T5(3)/ 5172/2013 நாள் 4.2.2014.

**

நில அளவை எண் 260/4A, 4B1, 4B2, 262/1, 2, 263/2A, 2B, 264, 265/1B. 296/1, 3, 4, 6, 7, 8A, 8B, 297, 298, 299/1, 3, 301/5 மற்றும் 360/2 , பெரும்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம்,, சென்னை –இல் வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் கொண்ட 3 கூடுதல் தொகுப்பு கட்டிடங்கள் (N,P,R) மற்றும் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் கொண்ட தொகுப்பு கட்டிடங்கள் (திருத்தம் செய்து திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான) மொத்தம் 16 தொகுப்பு கட்டிடங்கள் (A,B,C,D,E,F,G,H,J,K, LIG, N,P,R இன்சிடெண்டல் வணிக வளாகம் 1 & 2) குறைந்த வருவாய் பிரிவினைற்கான 112 குடியிருப்புகளும் மற்றும் இன்சிடெண்டல் வணிக வளாகம் 1: வாகன நிறுத்துத் தளம் + 4 தளங்கள் மற்றும் இன்சிடெண்டல் வணிக வளாகம் 2: தரைத் தளம் + முதல் தளம் கொண்ட மொத்தம் 636 குடியிருப்புகள் (குறைந்த வருவாய் பிரிவினற்காக 112 குடியிருப்புகள் உட்பட) கொண்ட கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–4ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 4–இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, இரசீது எண்கள் 02955, SD/237 மற்றும் 2956 நாள் 23/10/2015–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

	மொத்தக் கட்டணம்	B1/18484/12 நாள் 1.4.2014 கடிதத்தின்படி முன்பு செலுத்தியுள்ள கட்டணம்	மீதிக் கட்டணம் செலுத்தியது
வளர்ச்சிக் கட்டணம்	ரூ. 9,35,000/–	ரூ.6,50,000/– இரசீது எண் 435 நாள் 30.4.2014	ரூ.2,85,000/– இரசீது எண் 2955 நாள் 23.10.15.
கூர்ந்தாய்வுக் கட்டணம்	--	--	ரூ.1,10,000/– இரசீது எண் 2955 நாள் 23.10.15.
வரன்முறைக் கட்டணம்	ரூ. 8,95,000/–	ரூ. 85,000/– இரசீது எண் 435 நாள் 30.4.2014	ரூ.8,10,000/– இரசீது எண் 2955 நாள் 23.10.15.
திறந்தவெளிக் கட்டணம்	இல்லை	இல்லை	இல்லை
கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்:	ரூ.1,52,60,000/–	ரூ.1,24,50,000/– இரசீது எண் SD/53 நாள் 30.4.14.	ரூ.28,15,000/– இரசீது எண் SD/237 நாள் 23.10.15

கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம்	ரூ. 6,91,000/-	ரூ. 5,60,000/- இரசீது எண் SD/53 நாள் 30.4.14.	ரூ.1,31,000/- இரசீது எண் SD/237 நாள் 23.10.15
அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி	ரூ. 10,000/-	ரூ. 10,000/- இரசீது எண் SD/53 நாள் 30.4.14.	இல்லை
தற்போதைய உள்கட்டமைப்பு வசதி கட்டணம்	ரூ. 34,15,000/-	--	ரூ.34,15,000/- இரசீது எண் 2956 நாள் 23.10.15.
மொத்த கட்டணம்	--	--	ரூ.75,66,000/-

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிளுக்கான வடிவமைப்புகள் வசதி இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. எண் பி/சிறப்புக் கட்டிடம்/ 84/ 1 to 43 /2016 நாள் 13.04.2016 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 13.04.2016 இருந்து 12.04.2019 வரை செல்லுபடியாகும். (Permit No.9522)

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் ஆணையாளர், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தினை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி

செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. விண்ணப்பதாரர் பார்வை – 10ல் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திடமிருந்து உத்தேச திட்டத்தில் சுத்திகரிப்பு அமைப்பிற்கான (1 & 2) தடையின்மைச் சான்றிழதில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டுமானம் கட்டப்பட்டு முழுமைச் சான்றிதழிற்கு விண்ணப்பிக்கக் பட வேண்டும்.

13. விண்ணப்பதாரர் மேலும் கூடுதல் 3 தொகுப்பு கட்டிடம் (N. P & R) 132 குடியிருப்புகளுக்கான (124 குடியிருப்புகளுக்கு ஏற்கனவே தடையின்மைச் சான்றிதழ பெறப்பட்டுள்ளது) சுத்தகரிப்பு அமைப்பு 3க்காக சென்னை பெருநகர குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டு கட்டுமானம் கட்டப்பட்டு முழுமைச் சான்றிதழிற்கு விண்ணப்பிக்கப் பட வேண்டும்.

14. உத்தேச திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தை அரசாணை என் 97, MAWS Dept., நாள் 7.7.2015ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டப்பட வேண்டும்.

15. உத்தேச கூடுதல் கட்டுமானத்திற்காக இந்திய சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் வன அமைச்சகத்திடமிருந்து கட்டுமானம் துவங்குவதற்கு முன் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டு அதில் கூறும் நிபந்தனைகளின்படி கட்டுமானம் கட்டப்பட வேண்டும்.

16. மேலும் சூரிய ஒளியை சேகரித்து மின்சாரத்தை வெளிப்படுத்தும் Solar Photo Voltaic உபகரணத்தை விண்ணப்பதாரர் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் கட்டிட முழுமைச் சான்றிதழ் விண்ணப்பிப்பதற்கு முன் கட்டிட மொட்டை மாடியில் மூன்றில் ஒரு பங்கு மொட்டை மாடி பரப்பளவிற்கு பொருத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

17. விண்ணப்பதாரர் பார்வை 12ல் உத்தேச திட்டத்திற்கான மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட இசைவு கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டுமானம் கட்டி முடிக்கப்பட்டு கட்டிட முழுமைச் சான்றிதழிற்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

18. பார்வை–13ல் கண்ட கடிதத்தில் நீ.ஆ.வ. துறை குறிப்பிட்ட நிபந்தனைகளை கடைபிடித்ததற்கான பணி நிறைவுச் சான்றிழினை அத்துறையிடமிருந்து பெற்று இவ்வலுவலகத்தில் கட்டிட முழுமைச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் போது சமர்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

19. இந்த திட்ட அனுமதிக்கான மனையானது நீர்நிலையில் அமையவில்லை, புறம்போக்கு நிலத்தில் அமையவில்லை, நில உச்சவரம்பின் கீழ் அமையவில்லை, நில எடுப்பு இடப்பகுதியின் கீழ் அமையவில்லை என்று சம்பந்தப்பட்ட வருவாய்த் துறையிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை விண்ணப்பதாரர் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் முழுமைச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பாக வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இந்த திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

20. குறைந்த வருவாய் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளின் பரப்பளவினை ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்ட வேண்டும். மேலும் இப்பரப்பிளவினை அதிகப்படுத்தவோ குடியிருப்புகளை ஒருங்கிணைக்கவோ கூடாது என்ற நிபந்தனைகளுடன் இத்திட்ட அமதி அளிக்கப்படுகிறது.

21. பார்வை 8ல் ஏற்கனவே அளிக்கப்பட்ட திட்ட அனுமதி இரத்து செய்யப்பட்டு, கட்டணங்கள் ஈடு செய்யப்பட்டு இப்புதிய திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

13/4/16

உறுப்பினர்–செயலருக்காக.

13/4/16

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:1, திருவாளர்கள் அர்பன் ட்ரீ இன்ஃப்ராஸ்டரக்சர் பிரைவேட் லிட்.
புதிய எண் 86, பழைய எண் 133, 6வது தளம்,
குட் ஷெப்பர்டு டவர், கோடம்பாக்கம் நெருஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை 600 034

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority)
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

4. துணைதிட்ட அமைப்பாளர் (தெற்கு)
செயலாக்கப்பிரிவு, செ.பெ.வ.குழுமம், சென்னை–8.

பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு டி.டி.R. சுகாசினி ரங்கராஜன்

ந. உ. எண் :

மு மு. எண் : 5/2016-2017

நாள் 6-5-16 200

பொருள் : மனைபிரிவு/மனைஉட்பிரிவு/கட்டிட வரைபட அனுமதி
— பெரும்பாக்கம் ஊராட்சி
தெரு/ரோடு, புல எண் 260/1,2, 260/4A, 4B1, 4B2, 263/2A, 2B, 264, 265/1B, 296/1,3,4,6,7,8A,8B, 297, 298, 299/1,3, 301/5, 302/2
மனை எண் .... ஆகியவற்றில்
கட்டிடம்சுற்றுச்சுவர்/கிணறு/முதலியன கட்டுவதற்கு
அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை : அரசு ஆணை எண். 255 நாள் 19-8-97
திரு/திருமதி M/s. அரிஹந்த் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி. லிமிடெட் அவர்களின்
மனுநாள் 5.5.16

உத்திரவு : M/s.
~~திரு/திருமதி~~ அரிஹந்த் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி.லிமிடெட் என்பவருக்கு பெரும்பாக்கம்
கிராமம் — தெரு புல எண் 260/4A, 4B1, 4B2 ------ 302/2 மனை எண் —
பெரும்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கட்டிடம் / சுற்றுசுவர் / கிணறு / கழிப்பிடம் / குளியலறை கடைகள் முதல் தளம்/இரண்டாம் தளம்/பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் ஆகியவைகள் கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது 6.5.19 ம் தேதி வரை 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் அனுமதி கட்டணம் ரூ. 2378540/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூற்று நாற்பது மட்டும்) செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீது எண் 11571 நாள் 6.5.16 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரை படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
ரூ. 62,000/- மழைநீர் சேகரிப்பு கட்டணம் M.R. எண்: 11572/6-5-16

நிபந்தனைகள் :

1. கட்டிடத்தின் முன்பக்கத்தில்............மீட்டருக்கு குறையாமலும், பின்பகுதியில்............மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும்............மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுபாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.

4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரை படங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5 இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டிமுடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6 அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர்/நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதெனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர், செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றித்தல் வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தலைவர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை-600 100.

தலைவர்/நிர்வாக அதிகாரி
ஊராட்சி, ... ஒன்றியம்,
பின்கோடு ....

பெறுநர்

திரு/திருமதி

M/s. அர்பன்ட்ரீ இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி. லிமிடெட்
புதிய எண்: 86, ப. எண்: 133 வேலு கிராமணி
இடம் ஜெய்ப்பர்டு டவர்
கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

S.R.W.D.S. - CNI
ஊராட்சி படிவம் எண் 6

பலவகை வரவு ரசீது

அசல் **No. 11572**

பற்று சீட்டு எண் :
நாள் : 6.5.16

..................ஊராட்சி

திரு M/s அர்பன்ட்ரீ இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி.லிமிடெட்
பெரும்பாக்கம் என்பவரிடமிருந்து

ரூ 62,000/- (ரூபாய் அறுபத்து இரண்டு ஆயிரம் மட்டும்)

மழைநீர் சேகரிப்பு கட்டணம் வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம் — வரி வசூலிப்பவர் — ஊராட்சி தலைவர்

செயலர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை-600 100.

தலைவர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை-600 100.

குறிப்பு :

1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சி தலைவரின் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட்ட வேண்டும் இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

S.R.W.D.S. - CNI
ஊராட்சி படிவம் எண் 6

பலவகை வரவு ரசீது

அசல் **No. 11571**

பற்று சீட்டு எண் :
நாள் : 6.5.16

..................ஊராட்சி

திரு M/s அர்பன்ட்ரீ இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி.லிமிடெட்
பெரும்பாக்கம் என்பவரிடமிருந்து

ரூ 23,78,540/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐந்நூற்று நாற்பது மட்டும்)

கட்டிட வரைபட அனுமதி கட்டணம் வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம் — வரி வசூலிப்பவர் — ஊராட்சி தலைவர்

செயலர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை-600 100.

தலைவர்
பெரும்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை-600 100.

குறிப்பு :

1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சி தலைவரின் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட்ட வேண்டும் இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate